


உ






# பூர்ண பலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாத வெளியீடு

(தை – JANUARY – 2022)

ஸ்ரீ மகா பெரியவா பூர்ண பலத்துடன்

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்."



# உள்ளடக்க அட்டவணை


தோரண வாயில் .......... 5

உங்கள் எண்ணம் (ஆசிரியருக்கு கடிதம்) .......... 6

ஸ்ரீ மஹாபெரியவா அருளுரை .......... 8

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (1) .......... 10

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (2) .......... 13

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (3) .......... 15

நல்லவனே வல்லவன் .......... 17

இல்லத்தில் லக்ஷ்மி கடாக்ஷம் நிலைத்து இருக்க .......... 19

வேத பண்டிதர்களிடம் மஹாபெரியவாளுக்கு இருந்த அன்பும், காட்டிய மரியாதையும் .......... 21

மரங்களின் மகத்துவம் .......... 23

பலன்தரும் பதிகங்கள் .......... 25

குறையால் நிறையாது மனது .......... 28

வைணவப் பெரியோர்கள் வரலாறு .......... 30

கண்ணன் கதைகள் .......... 31

சுந்தர காண்டத்தின் சிறப்பு .......... 33

தெரிந்த புராணம்; தெரியாத கதைகள் .......... 35

குழந்தை செல்வங்களின் கைவண்ணம் .......... 38

இம்மாதத்தில் வரும் பண்டிகை, விரத நாட்கள் .......... 39

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணை ஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம் மற்றும் வடிவம்: VVSS Trust-இன் நண்பர்கள்

அட்டை மற்றும் பக்கங்கள் 10, 13, 14, 15, 16, 20, 30, 31, 35, 36-இல் உள்ள படங்கள் அனைத்தும் கூகிள் படத் தேடல் (Google Image Search) மூலமாய் பெற்றவை. இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.

மற்ற படங்களின் அனைத்து உரிமைகளும் ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.

இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரண வாயில்

*ஆசிரியர் முன்னுரை*

அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்!

பூர்ணபலம் முதல் இதழே எதிர்பார்த்ததை விட அதிக வரவேற்பை பெற்றுவிட்டது. மிக்க மகிழ்ச்சி!! எல்லோருக்கும் நன்றி படித்துவிட்டு பாராட்டிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி. சிலர் அறிய யோசனைகளையும் வழங்கி உள்ளனர். அத்தனையும் நினைவில் கொண்டு உள்ளேன். வரும் காலத்தில் அதனை அமுல் படுத்துவேன். நீங்களும் இதில் பங்கு கொள்ள வேண்டும். உங்கள் குடும்ப உறுப்பினர்களும் பங்கு கொள்ள வேண்டும் என்பதே என் ஆவல் எதிர்பார்ப்பு எல்லாம், நிறைவேற்றுவீர்களா?

*நன்றி வணக்கம்!*

என்றென்றும் இறைப்பணியில்,

அன்புடன்,

கி.வேணுகோபால்

## என் அகஇருளை நீக்கிய "இருள்நீக்கி" மஹான்

ஜடாமுடியும் இல்லை, அதில் பிறை சூடவுமில்லை, த்ரிநேத்ரதாரியாக தோன்றவில்லை, சர்ப்ப ஆபரணமில்லை, ருத்ரகாஷதாரியாய் நின்று, சூலமில்லாமல், ஆனால் கையில் ஏகதண்டமுடன் காவி தரித்து, காளை வாகனமின்றி, தன் கால்களையே வாகனமாய் கொண்டு, வடக்கே இமாலயத்திலிருந்து, தெற்கே குமரி வரை இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் விஜயம் செய்து நம்மை நல்வழி படுத்தும், கலியுக பரமேஸ்வரன் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி ஸ்வாமிகளின் பாதங்களை முதற்கண் வணங்குகிறேன்.

ஆதி முதல் என்னை நல்வழி படுத்தி, பெரு மதிப்பிற்கு உயரிய பெரியோரின் நல்ல துணை அமைத்து கொடுத்த - ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ புது பெரியவாளுக்கு எளிய தமிழில் 108 போற்றி எழுத முயற்சிக்க உள்ளேன். இந்த எண்ணம் எழ, எனது தந்தையின் ஒரு முயற்சியில் பங்கு பெற எனது இச்சையே காரணம். மஹாசிவராத்திரி அன்று நமது ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் விநியோகிக்க உள்ள "பலன்தரும் பதிகங்கள்" புத்தகத்தில் இந்த 108 போற்றி வாசகங்களை சமர்ப்பிக்க எண்ணுகிறேன்.

இந்த முயற்சிக்கு தங்கள் மேலான ஆதரவை தருமாறு வேண்டுகிறேன்.

ஜெய ஜெய சங்கர

ஹர ஹர சங்கர

என்றென்றும் இறைப்பணியில்,

பணிவுடன்,

ச. இராஜலக்ஷ்மி

# உங்கள் எண்ணம் (ஆசிரியருக்கு கடிதம்)



**சி. முத்துஸ்வாமி, கோவை:-**

அருமையாக வந்துள்ளது. அனைத்து தலைப்புகளிலும் எழுதப்பட்டவைகள் சிறப்பாக உள்ளது. இதழின் இதே தரம் தொடர தங்களுக்கு மஹாபெரியவா அருளாசி வழங்கட்டும். மீண்டும் எனது நன்றிகள்.

*(நன்றி நண்பரே, இதே தரம் தொடர தொடர்ந்து முயற்சிக்கிறேன்)*

**திரு அங்கராஜ், திருச்சி:-**

ஸ்ரீ மஹாபெரியாவா அனுக்கிரஹம். ஆரம்பமே அற்புதம், அபாரம். குழந்தைகளுக்கு, வயதில் மூத்த இளையோருக்கு, ஆன்மீக தேடல் உள்ளவர்களுக்கு ஓர் அமுத சுரபி, அன்னை காமாக்ஷி, குறை ஒன்றும் இல்லை.

*(மிக்க நன்றி, தாங்களும் எழுதணும்)*

**திருமதி ரேணு பாலா, இங்கிலாந்து:-**

பூர்ணபலம், சிறப்பான முயற்சி. பணி இனிதே தொடர வாழ்த்துக்கள்

*(நன்றி அம்மா)*

**ஜெ.ஸ்ரீநிவாஸன், குணசீலம்:-** மிகவும் அருமை, மஹா பெரியவாளின் தீர்க்கதரிசனம் நம்மை வழி நடத்த, சத்தியமானது இன்று இருக்கும் கல்வி, குடும்ப வாழ்க்கை, பணம் , பதவி , சுகபோகம் அனைத்தும் ஒரு நிம்மதியில்லா வாழ்வை தருகிறது. அதற்கு ஒரு தீர்வு அன்றே சொல்லியும் கேட்காத சமூகமாக இருந்ததால் இன்று எல்லா யிடங்களிலும் நமக்கு நிம்மதியில்லை குரு வாக்கு திருவடி நம்மை வழிநடத்த பிரார்த்திப்போம். முசிறி கோவிலை பற்றிய தகவல்கள் மிகவும் அருமை, ஆசிரியரின் நோக்கம் மிகவும் அருமை இளைஞர்கள் வழிநடத்த மிகவும் உதவும் பகவானை பிரார்த்திப்போம். பாளையம் ஸ்ரீ கதிர்நரசிம்மர் மிகவும் சக்தி வாய்ந்தவர் பெருமாளின் திருமேனியில் ஜீவாலா சக்கரங்கள் பல உள்ளது நாம் தரிசிக்க முடியும் அதன் மூலம் நம் உடலில் உள்ள சக்கரங்கள் திறந்து செயல்படும்.

ஸ்ரீ வாரியாரின் வார்த்தைகள் மிகவும் அருமை புத்தகம், பணம், பெண் பற்றி கூறியது எவ்வளவு நிதர்சனம். ஸ்ரீ ஸ்ரீ ஆதிசங்கரரின் வாழ்வில் நடந்தது மிகவும் சுவையானது, அக்கால பெண்கள் எவ்வளவு ஞானம் அதில் நான் பார்த்தது அந்த பெண்கள் அக்ரஹாரம் சேராதவர்கள் அவர்களும் எல்லா ஞானத்துடன் இருந்தார்கள் என்பதும் நடுநிலை நின்றவர் இரு துறவிகளும் உணவருந்த வாருங்கள் என்று சொன்ன வாக்கு மிக அருமை பெண்மையை போற்றுகிறது. ஆழ்வார்களை பற்றி செய்திகள் மிக அருமை இன்றும் நம்மாழ்வார் வசித்த அந்த மரம் ஆழ்வார்திருநகரியில் காட்சி தருகிறது.

ஆன்மீக செய்திகள் மிகவும் அருமை, வில்வ மரம் பற்றியும் அதை எல்லா யிடங்களிலும் வளர்ப்பதை ஊக்குவிக்கும் பால பெரியவாளை தெண்டம் சமர்பிக்கிறேன் பொக்கிஷங்கள் பாதுகாக்க படவேண்டும் என்ற பெரியவாளின் ஆசீர்வாதம் நமக்கு கிடைத்த பாக்யம். தங்களின் தொண்டு மிகவும் அருமை, அதற்கு நம் குணசீலப் பெருமாள் என்றும் துணை நிற்க பெருமாளை பிரார்த்திக்கிறேன்.

அடியேன்
தாஸன்

*(தங்களின் ஊக்கத்திற்கும், நல்ல வார்த்தைகளுக்கும் எண்களின் சிரம் தாழ்ந்த நன்றிகள்.)*

**பூங்குழலி சேகர், சென்னை:-** மகிழ்ச்சி மிக்க நன்றி.
**க்ரிஷ் சென்னை:-** பெரிய விஷயம் அப்பா 🙂
அப்பா, மனமார்ந்த வாழ்த்துகள்.இது போல பல்வேறு இறை பணி செய்யவேண்டும் என்று வேண்டி கேட்டுகொள்கிறேன். ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர

*இது போல பல நல்ல உள்ளங்கள், தங்களது வாழ்த்துக்களை குறும் செய்திகள் மூலமும், தொலைபேசி வாயிலாகவும் தெரிவித்து உள்ளனர். அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.*

*****

# ஸ்ரீ மஹாபெரியவா அருளுரை

*கல்வியின் இலக்கணம்*





ஸ்ரீ மடம் அதிஷ்டானம், காஞ்சிபுரம் மகா பெரியவா மணிமண்டபம், ஓரிக்கை

நம் நாட்டுப் பெண்களின் இயற்கையான குணம் அடக்கம். படிக்கிற பெண்களுக்கு ஸ்வபாவமான அடக்க குணத்தோடு, கல்வியின் பிரயோஜனமாக பின்னும் அதிக அடக்கம் வளர வேண்டும். ஆனால், யூனிவெர்சிட்டியில் படிக்கும் பெண்கள் ப்ரின்சிபாலை அவமானப் படுத்த கொடும்பாவி கட்டி இழுத்தார்களாமே!

ஸ்வபாவமாக, நல்லவர்களாக பெண்களின் குணத்தையும் அல்லவா இந்தக் கல்வி போக்கி விட்டது. "அப்படியானால் இந்தப் படிப்பு வேண்டுமா? வேண்டாமா? குணத்தைக் கொடுக்கும் படியான படிப்பு, குணத்தைக் கெடுக்கும் படியாக இருக்கிறதே! ஏன் அப்படி இருக்கிறது? பழைய காலத்து கல்வி வேறு. இந்தக் காலத்துக்கு கல்வி வேறா? இல்லை என்றால் கல்வியின் ஸ்வபாவ குணமே அடக்கம் இல்லாத தன்மையைத் தான் கொடுக்குமா? அப்படியானால் கல்வியே வேண்டாமே என்று தோன்றும். "இளமையில் கல்" என்று ஔவை சொல்கிறாள். ஔவை வாசகத்தில் பொய்யே இருக்காது. ஏதாவது ஒரு விஷயம் "பொய் இல்லை, உண்மைதான்" என்பதற்கு 'இது வேத வாக்கு' என்பார்கள். வேத வாக்கு என்றால் சத்திய வாக்கு.என்று சொல்வது வழக்கம். ஔவை வாக்கு என்றால் சத்தியம். அவள் இளமையில் கல் என்கிறாள். பால்ய வயசில் படி - கற்றுக்கொள் என்கிறாள். கலாசாலை, கல்வி சாலை

என்பதற்கு மூலச் சொல் 'கல்'. ஔவை வேறோர் இடத்தில், "சபை நடுவே நீட்டோலை வாசியான், நின்றான் நெடுமரம்" - என்கிறாள். அதாவது படிக்காதவன் மரத்துக்கு சமம் என்கிறாள். ஒருபக்கம், "படிக்க வேணும், படிக்க வேணும் என பெரியவர்கள் சொல்கிறார்கள்.ஆனால் இந்தக் காலத்தில் படித்தவர்களிடம் நல்ல குணங்கள் இல்லை. படிக்காதவர்களை விட, படித்தவன்தான் அதிக கஷ்டப் படுகிறான். அனாவசிய விவகாரங்களில் தலை இட்டுக் கொண்டு, தானும் கஷ்டப் படுகிறான். பிறருக்கும் கஷ்டத்தை உண்டாக்குகிறான்.

கல்வியின் பயன் மெய்யான பொருளை, ஆண்டவனை தெரிந்து கொள்வதுதான்.ஆனால் இக்காலத்தில் படிக்கிறவர்களுக்கு தெய்வ பக்தியே இருப்பது இல்லை.ஆகவே, "இந்தப் படிப்பு என்னவோ சரியில்லை. வேண்டவே வேண்டாம் என்று சொல்லலாமா?

"வித்யா வினய சம்பன்னா"- என்றார் ஒருவர். இங்கு விநயம் என்றால், அடக்கம், வணக்கம் என்று அர்த்தம். இப்படி நல்ல குணங்களுக்கு நேர் விரோதமான குணங்களே வருவதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஒவ்வொருவரும் கொஞ்சம் யோசித்து பார்த்தால், அதுவே வாழ்நாளில் முழு சகாயமாக இருக்கும். படிப்பு என்றால் எப்படி இருக்க வேண்டும்? எப்படி படிக்க வேண்டும்? சிஷ்யர்கள் எப்படி இருக்க வேண்டும்? ஆசிரியர்கள் எப்படி இருக்க வேண்டும்? என்பவற்றை எல்லாம் விளக்கி சொல்ல தர்ம சாஸ்த்திரம் இருக்கிறது.

முன்பு படிப்பதற்கு பாடசாலைகள் இல்லை. ஒரு குருவினிடத்தில் சென்றுதான் கற்றுக் கொண்டார்கள்.இப்போது எல்லா கலைகளையும் கற்பிக்க தனித் தனி பள்ளிக்கூடம் இருக்கிறது.

ஆசிரியர் சம்பளம் வாங்குகிறார். மாணவர்கள் பணம் காட்டுகிறார்கள். எனவே எங்களிடம் சம்பளம் வாங்கித்தான் நீ சாப்பிடுகிறாய் என மாணவர்கள் நினைக்கிறார்கள்.மாணவன் உட்கார்ந்து கொண்டு பாடம் கேட்கிறான். ஆசிரியர் நின்று கொண்டு கற்பிக்கிறார். இதனால் அடிப்படையில், முன்பிருந்த குருபக்தி என்பது இப்போது மாணவர்களிடையே அடியோடு போய் விட்டது. பையன் வாத்யாரைப் பார்த்து, "நான் பணம் கொடுக்கிறேன் சொல்லிக்கொடு. பணம் கொடுக்கிறேன். கேள்வித் தாளையே கொடு: இல்லாவிட்டால் அடிப்பேன்"- என்று சொல்லக் கூடிய நிலையே வந்து விட்டது.

முன்பிருந்த கல்வி முறைதான் இப்போதும் இருக்கிறது.ஆனால் முறை மாறி விட்டது. மருந்து ஒன்றாக இருக்கலாம். ஆனால் பத்தியம் மாறி விட்டால், மருந்தே விஷம் ஆகிவிடும் என்பது போல்தான் இது இருக்கிறது.முறை மாறி விட்டது. அதனால் ஸ்வபாவ குணங்களுக்கு நேர் விபரீதமான குணங்களை உண்டாக்குகிறது. வித்தைக்கு பதில் அவித்தை உண்டாகிறது.

*(அடுத்த இதழில் ஸ்ரீ பெரியவா குருவின் தகுதி என்பதைப் பற்றி சொல்வதைக் காணலாம்)*

*****

# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (1)

*திருக்கச்சி ஏகாம்பர ஈஸ்வரர் ஆலயம், காஞ்சிபுரம்*




**அமைவிடம்:** காஞ்சி மாநகர் கோவில்களின் நகரம் என அழைக்கப்படுகிறது. இங்கே 108 சிவாலயங்களும், 15 வைணவ திவ்ய தேசங்களும் உள்ளன. முக்தி தரும் 7 நகரங்களுள் காஞ்சிபுரம் ஒன்று. இங்குள்ள மிகப் பெரிய சிவ ஆலயங்களுள் ஏகாம்பரநாதர் ஆலயம் முதன்மையானது. ப்ரித்வி ஸ்தலம் (மண்). 1300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அதற்க்கு சான்றாக இங்கே ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. பல்லவன், சோழன் காலத்தில் உள்ள சிற்பக்கலை சிற்பங்கள் இங்கு ஏராளமாக உள்ளன.

**இறைவன் திருநாமம்:** ஏகாம்பரேஸ்வரர், ஏகாம்பரநாதர், திருவேகம்பர்

**இறைவியின் திருநாமம்:** காமாட்சி, ஏலவார்குழலி

**கோவில் ஸ்தல வரலாறு:** கைலாயத்தில் முன்னம் ஒருநாள் பார்வதி தேவி விளையாட்டாக சிவ பெருமான் கண்களை மூட, உலகம் இருந்தது. உயிரினத்தின் இயக்கங்கள் நின்றன, தவறை

உணர்ந்த பார்வதி தேவி, சிவனிடம் மன்னிப்பு கோர. அவர் பூலோகம் சென்று தவம் செய்வாய் என கட்டளை இட்டார். அம்பிகையும் காஞ்சி மாநகர் வந்து, வேதமே ஒரு மாமரமாய் நிற்பதை கண்டு, அதன் அடியில், மணலால் லிங்கம் அமைத்து உக்கிரமாய் தவம் செய்தாள். தவத்தினை சோதிக்க எண்ணிய சிவபெருமான், தன் தலையில் உள்ள கங்கைக்கு கட்டளை இட, அவள் வேகவதி ஆறாக மாறி பாய்ந்து வந்தாள். "எங்கே தான் மணலால் பிடித்து வைத்த லிங்கம் அடித்துக் கொண்டு சென்றுவிடுமோ என்ற பயத்தில், பார்வதி லிங்கத்தை ஆறத் தழுவிக்கொள்ள, மகிழ்ச்சி அடைந்த சிவ பெருமான் காட்சி அளித்து அம்பாளை கரம்பற்றி மணந்து கொண்டார்.


அம்பாள் தழுவியதால் லிங்கத்தின்மீது வளையல் தழும்புகள் இருப்பதை இன்றும் காணலாம். மணலால் ஆன லிங்கம் என்பதால் அபிஷேகம் குவளை சாற்றித்தான் செய்யப்படும். தைலக் காப்பும், புனுகு சட்டமும் சாற்றப் படுகிறது. அம்பாளுக்கு தனி சந்நிதி கிடையாது. பெருமாளுக்கு இங்கே "நிலாத்திங்கள் துண்டத்தான்" என்ற திருநாமத்தோடு ஒரு தனி சந்நிதி உள்ளது. இது ஒரு திவ்ய தேசமாகும். இதைப்போலவே, காமாக்ஷி ஆலய கருவறை அருகில்,"திருக்கள்வன்" என்ற பெயரில் ஒரு திவ்விய தேசம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஏகாம்பரர் ஆலயத்தில், தேவி தவம் இயற்றிய மாமரம் உள்ளது. இதனை: மாவடி சந்நிதி என்பர். நான்கு வேதமே இங்கே ஒற்றை மா மரமாகி நின்றது. இதில் நான்கு கிளைகள், ஒவ்வொரு கிளையிலும் ஒவ்வொரு சுவையில் பழுக்கும் மாமரங்கள் இதன் சிறப்பு.



"ரத சப்தமி" தினத்தில் சூரிய ஒளி சுவாமியின் மீது விழுவது மற்றொரு சிறப்பு. சைவ சமய குறவர்கள் நால்வரும் பாடிய பாடல் பெற்ற ஸ்தலம். இங்கே "விகட சக்கரர் என்ற திருநாமத்துடன் விநாயகரும், மாவடிக் கந்தர் என்ற பெயரில் சுப்ரமண்ய ஸ்வாமியும் எழுந்தருளி அருள்பாலிக்கிறார்கள். பெரிய நிலப்பரப்பு, ஆயிரம்கால் மண்டபம் என பரவி

விரிந்திருப்பதால், சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகிறார்கள். பரமேஸ்வரன் அம்பாளை கைத்தலம் பற்றிய ஸ்தலம் ஆனதால், திருமணப் பிரார்த்தனை, மகப்பேறுவேண்டி பிரார்த்தனைகள் இங்கு அதிக அளவில் நடக்கின்றன.



வாய்ப்பு இருக்கும் போது அனைவரும் வந்து தரிசிக்க வேண்டிய சிறப்புமிக்க ஸ்தலம்.

*ஓம் நமசிவாய!*

*****

# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (2)

*காஞ்சி அஷ்டபுய பெருமாள் ஆலயம்*



**அமைவிடம்:** காஞ்சிபுரத்தில் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் இருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ளது.ரங்கசாமி குளத்திற்கு தெற்கே அமைந்துள்ளது. ஹாட்சன் பேட்டை என்னுமிடத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

**இறைவன் திருநாமம்:** ஆதிகேசவப் பெருமாள்

**இறைவியின் திருநாமம்:** அலர்மேல் மங்கை, பத்மாசனி

**கோவில் ஸ்தல வரலாறு:** ஒருமுறை பிரம்மா காஞ்சியில் யாகம் செய்தார். எது காரணத்தாலோ அவர் தன் மனைவி சரஸ்வதியை அழைக்கவில்லை. இதனால் கோபம் அடைந்த சரஸ்வதி தேவி, அந்த யாகத்தை நிறுத்த பல இடையூறுகளை செய்தார். பிரம்மாவோ காக்கும் கடவுளான மஹாவிஷ்ணுவை சரணடைய அவர் தோன்றி "நான் யாகத்தை ரக்ஷித்து தருகிறேன்" என வாக்குறுதி அளித்தார். சரஸ்வதி தேவி, தன் வலிமையால், காஞ்சியில் மாபெரும் இருளை உண்டாக்கினார். பெருமாளே ஜோதி வடிவாய் தோன்றி முன்னைவிட பல மடங்கு ஒளியை

உண்டாக்கினார். அவர்தான் "தீப பிரகாசர் (விளக்கொளி பெருமாள்)"- என்ற தனி திவ்ய தேசத்தில் அருள்பாலிக்கிறார்.



பின் சரஸ்வதி தேவி, ஆத்திரத்துடன் காளி தேவியையும், அவருடன் வேறு சில அரக்கர்களையும் ஏவினார். பெருமாளோ அஷ்டபுஜத்துடன் (எட்டு கரங்களுடன்) தோன்றினார். ஒவ்வொரு கரங்களிலும் திவ்ய ஆயுதங்கள் ஏந்தினார். ஒரு கரத்தில் சக்கரம், வாள், அம்பு, மலர், மறுகரத்தில் சங்கு, வில், கேடயம், தண்டாயுதம் ஆகியவற்றோடு தோன்றி காளியை அடக்கி அரக்கர்களை அழித்தார்.

திருத்தல வரலாற்றின்படி, இந்நிகழ்வு சித்திரை மாதம் ரோகினி நன்னாளில் நடந்ததாம். இந்த கோவில் சன்னதிக்கு அருகில் கருங்காளி அம்மன் கோவில் உள்ளது. தொண்டைமண்டல வைணவத் தலங்களுள் இக்கோவிலில் மட்டுமே பரமபத வாசல் உள்ளது. அலர்மேல் மங்கை, பத்மாசினி என்ற பெயரில் தாயாருக்கு தனி சந்நிதி உள்ளது.

பேயாழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். மணவாள மாமுனிகளும் இப்பெருமாள் மீது பாடல்கள் பாடி உள்ளார். வைரமேகன் என்ற தொண்டை நாட்டு மன்னன் இக்கோவிலை கட்டினான்.

ஆதிகேசவ பெருமாள், கஜேந்திர வரதன் என்னும் திருநாமங்களாலும் இவர் அழைக்கப்படுகிறார். தனது எட்டு திருக்கரங்களால் வரங்களை வாரி வழங்கி கொண்டிருக்கும், இந்த அஷ்டபுய பெருமாளை, அனைவரும் தரிசித்து சர்வ மங்களையும் அடையும்படி பிரார்த்திக்கிறோம்.

*ஓம் நமோ நாராயணாய!*

*****


# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (3)

*அருள்மிகு தும்பவனத்து அம்மன் திருக்கோவில்*

**அமைவிடம்:** சின்ன காஞ்சிபுரம் அருகில் சதாவரம், ஓரிக்கை போஸ்ட்

**திருநாமம்:** அருள்மிகு தும்பவனத்து அம்மன்

**கோவில் ஸ்தல வரலாறு:** தும்பை பூக்கள் நிறைந்த காடாக இருந்த இடத்தில் அமைந்ததால் அம்மனுக்கு "தும்பவனத்து அம்மன்" என்று பெயர்.



"நகரேஷு காஞ்சி" - என்ற பெயருக்கு ஏற்ப பற்பல புண்ணிய நிகழ்வுகள் நடந்த மிகவும் சிறப்பு வாய்ந்த நகரமாகவே காஞ்சிபுரம் திகழ்கிறது.ஆதி சங்கர பகவத்பாதாள் நிறுவிய சண்மதங்களுக்கும்,

- சௌரம் [சூரிய வழிபாடு]
- கா(க)ணாபத்தியம் [விநாயகர் வழிபாடு]
- கௌமாரம் [முருக வழிபாடு]
- சைவம் [சிவ வழிபாடு]
- வைணவம் [திருமால் வழிபாடு]
- சாக்தம் [சக்தி வழிபாடு]

கோவில்கள் இங்கு பல உள்ளன. திவ்யதேசங்களும், பாடல் பெற்ற சிவாலயங்களும், ஷக்தி பீடமும், மகா புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கோவில்களும் இங்கு உண்டு. இப்படி கோவில் நகரமாக இருக்கும் காஞ்சிபுரத்தில் இந்த தை மாதத்தில் ஜகன்மாதாவான

அம்பிகையின் கோவிலான ஒரு சிறிய அழகிய கிராமப்புற கோவிலை பற்றி தெரிந்து கொள்ளுவோம். சின்ன காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜ பெருமாள் கோவிலில் இருந்து சுமார் 2.5 கி.மீ தொலைவில் உள்ளது இந்த திருக்கோவில். சுயம்பு திருமேனியுடன் காட்சிதரும் அம்பாள் 2 அடி உயரமாகவும் அருகில் பெரியபாளையம் மற்றும் ஊத்துக்காடு அம்மன் சன்னிதிகளும், கோவிலை சுற்றியும் கிராம மக்கள் ஒன்று திரண்டு தங்களுடைய குலவழக்கப்படி வேண்டுதல்களை செய்ய நிறைய இடம் உள்ளது.



செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் விசேஷ பூஜைகள் நடைபெறும். ஆடி, தை மாதங்களில் உற்சவங்கள் மிகவும் பிரசித்தி பெற்றது. கும்பகோணத்தை நமது ஸ்ரீ காமகோடி பீடம் தலைமையகமாகக் கொண்டு, பிறகு காஞ்சிபுரம் மாற்றலாகி வந்த போது, நமது நடமாடும் தெய்வமான 68-வது பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் [மகா பெரியவா] இங்கு சில நாட்கள் தங்கியிருந்து ஸ்ரீ த்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரர் ஸ்வாமிக்கு பூஜை செய்ததாக வரலாறு உள்ளது. இப்பவும் இந்த திருக்கோவில் ஸ்ரீ மடத்தின் மேற் பார்வையில் தான் உள்ளது.

**பெயர் காரணம்:** தும்பை பூக்கள் நிறைந்த காடாக இருந்த இடத்தில் அமைந்ததால் அம்மனுக்கு "தும்பவனத்து அம்மன்" என்று பெயர்.

**பிற சன்னதிகள்:** கணபதி, வள்ளி-தெய்வானை சமேத முருகப்பிரான், நவகிரகங்கள், சப்த கன்னிகள், நாகதேவதை, பெரியபாளையம் மாரியம்மன், ஊத்துக்காடு அம்மன்.

**கோவில் நடைதிறப்பு:** காலை 6:00 - 11:00 மணி வரை, மாலை 4:00 - 7:00 மணி வரை.

**கோவிலுக்கான ஸ்லோகம்:** துர்கா பஞ்சரத்னம், மகிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரம்

**கைபேசி:** 78118 12303

*ஓம் சக்தி!*

*****

# நல்லவனே வல்லவன்

- “காஞ்சி கண்ணன்” கணேஷ் ராகவ்

Hi Friends நான் உங்கள் கணேஷ் ராகவ், இந்த தளத்தில் உங்களுடன் நான் என் அற்புதமான அனுபவங்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன், முதலில் இந்த வாய்ப்பை வழங்கிய வேணுகோபால் அப்பா, ராகவன் அண்ணன், என் அன்பு சந்திரமௌலி மற்றும் இவர்களை என்னுடன் இணைத்த அத்திவரதர்க்கு நன்றி, இவர்கள் மட்டும் அல்ல இவர்களை போன்று பல அற்புதமான சொந்தங்களை அருளினார் அன்பு அத்திவரதர் இந்த அனுபவத்தை தான் நான் இங்கு உங்களிடம் பகிர்ந்து கொள்ள போகிறேன்.

YouTube தளத்தில் கணேஷ் ராகவை தேடி பார்த்தால் நான் யார் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதை ஓரளவு அறியலாம்.



என் பெயர் கணேஷ் ராகவ் 27 வயது, காஞ்சிபுரத்தில் வசிக்கின்றேன், காஞ்சிபுரம் கோயில் நகரம் ஏராளமான கோயில்களும் அவற்றின் திருவிழாக்களும் காஞ்சியின் அழகு, இந்த காஞ்சிபுரத்தில் உள்ள ஒரு சிறிய தெருவில் ஒரு பிள்ளையார் கோயிலை என் தாத்தா கட்டி அதை பராமரித்து வந்தார், இந்த இடத்தில் ஒரு தகவலை பகிர்ந்து கொள்கிறேன் ஒரு குழந்தையை நாம் எப்படி பட்ட குழந்தை என்று நினைத்து அதனிடம் கூறுகிறோமோ அப்படி பட்ட குழந்தையாகவே அது மாறும், குழந்தையை நல்ல பிள்ளை என்றால் நல்ல பிள்ளையாக இருக்கும் அதுவாகவே மாறும் இதை போல் தான் நான். என்னை நல்ல பிள்ளை என்று கூறியே வளர்த்தார்கள், என் தாத்தா எனக்கு ராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் புராணங்களை கதைகளாக எங்களுக்கு கூறுவர், நீ ராமன் மாதிரி அவன் கிருஷ்ணன் மாதிரி என்று கூறியே எங்கள் இயல்பும் அதைப்போலவே இருந்தது, இப்போது வரை என் தம்பியும் நானும் எவருக்கும் அறிந்து ஒரு தீங்கும் ஏற்படுத்தியது இல்லை, நான் நல்லவன் என்று பெரும்

கர்வத்துடன் வாழ்ந்து வருகின்றேன், நம் பிள்ளைகளுக்கு நல்லவற்றை கற்பித்தல் அவசியம் நம் யுக புருஷர்களை அவர்கள் அரிய வேண்டும், இப்போது உள்ள பெற்றோர் குழந்தைகள் வல்லவனாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் அதில் தவறு ஒன்றும் இல்லை ஆனால் நல்லவனாக இருப்பது அனைத்திலும் முக்கியம்...



என் தந்தையும் கடவுள் நம்பிக்கை உரியவர். அவருக்கு கிடைத்த அனைத்தும் கடவுளால் கொடுக்கப்பட்டது என்று நம்புபவர், சிறு வயதிலேயே நான் கடவுள் மீது மிகவும் பக்தி உள்ள சிறுவனாக இருந்தேன் அதற்கு காரணம் என் குடும்பம் என் ஊர்!

இப்படி இருந்த ஒருவனுக்கு கடவுள் மீது நாட்டம் இல்லாமல் போய்விட்டது அதற்கும் காரணம் என் குடும்பம் என் ஊர் என் சுற்றம். மீண்டும் நான் எப்படி கடவுளிடம் நெருங்கினேன் என்று அடுத்த பதிவில் பார்ப்போம்.

ஆனால் நான் நம்புவது எனக்கு உண்மையும் நேர்மையும் இருப்பதால் தான் கடவுள் என்னைப் பற்றி கொண்டார்...

நல்லவனாக இருந்தால் வல்லவனாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை அந்த ஆண்டவன் நம்மை பார்த்து கொள்வார்.

*தொடரும்...*

*****

# இல்லத்தில் லக்ஷ்மி கடாக்ஷம் நிலைத்து இருக்க



- ஸ்ரீமதி பாமா வேணுகோபால்

இல்லத்தில் லக்ஷ்மி கடாக்ஷம் நிலைத்து இருக்க யார்தான் விரும்ப மாட்டார்கள்? அதற்கு செய்ய வேண்டியது என்ன? எனக்கு தெரிந்ததை சொல்கிறேன்.

இல்லத்தில் எப்போதும் அரிசி, பருப்பு, உப்பு, ஊறுகாய், பால், மோர் இவைகளுக்கு தட்டுப்பாடு இருக்க கூடாது. அதற்காக வண்டி வண்டியாய் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. "யாரும் கேட்டால் இல்லை என்று சொல்லாத அளவிற்கு இருந்தால் போதும்".

செவ்வாய், வெள்ளி விளக்கு வைத்தாகி விட்டது. அதனால் மேலே கண்டா பொருட்களை தரமாட்டேன் என சொல்லக் கூடாது. இப்படி கூற எந்த சாஸ்த்திரமும் சொல்லவில்லை. ஒரு குழந்தை பசியால் பாலுக்கு அழும்போது, வெள்ளி என்ன செவ்வாய் என்ன? பசியைப் போக்க முதலில் பால் தருவதே தலையான தர்மம், புண்ணியமும் கூட, அடுத்த வீட்டுக்கு வந்த விருந்தினர்களை உபசரிக்க, அவர்கள் இல்லத்தில் இல்லாத உணவு பொருட்களை அவசரத்திற்கு நாம் கொடுத்து உதவ வேண்டும். அந்த புண்ணியத்தில் நமக்கும் பங்கு உண்டு.

வீட்டில் மூலைக்கு மூலை, குப்பை கூளங்கள், அழுக்கு துணிகள் இவைகளை குவித்து வைக்காதீர்கள். குளியலறை, கழிப்பறை முதற்கொண்டு சுத்தமாய் இருக்க வேண்டும். இவைகளை பெரிதாக கட்டிவிட்டு, ஸ்வாமிக்கு ஒரு சிறிய அறை, அல்லது ஒரு சின்ன மாடம் மட்டும் ஒதுக்காதீர்கள். ஸ்வாமிக்கு போகத்தான் நமக்கு வாழ்வதற்கு இடம். தேவை அற்ற டிவி செய்தி, சினிமா பாட்டுக்களை அலற விடாதீர்கள். ஸ்லோகங்கள், வேத கோஷங்கள் போன்றவைகள் அளவான சப்தத்தில் இல்லங்களில் ஒலிக்கட்டும். மங்களமான வார்த்தைகளை பேசாதீர்கள். எந்த பொருளாக இருந்தாலும், "இல்லை, தீர்ந்து போச்சு, என சொல்லாமல்; வாங்கி வரணும்", என சொல்லப் பழகுங்கள். வீட்டுக்கும் தலைவாரி முடியை போடுவது, நகம் வெட்டுவது போன்ற காரியங்களை செய்வது கூடாது. குழந்தைகள், கணவர் ஆகியோர் அண்ணன், தம்பி இருவர் ஒரே நாளில் முடி வெட்டிக்கொள்ள கூடாது. பெண்கள் விலக்கு காலத்தில் கூடிய வரை வெளியே செல்லாமல். வீட்டில் தனியாக இருக்கப் பாருங்கள். சாஸ்திரத்துக்கு சாஸ்த்திரம். உடலுக்கும் ஓய்வு. இதில் நிறைய விஷயங்கள் இருக்கின்றன.

வீட்டில் எப்போதும் மஞ்சள், குங்குமம், தேங்காய் இருக்கணும். வீட்டுக்கு சுமங்கலிகள் வந்தால் அவர்களுக்கு இதை கொடுத்து உபசரிக்கணும். பசித்து வந்தவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும். அவர்கள் யாசகர்களாய் இருந்தாலும். உணவு இல்லாவிட்டால் கொஞ்சம் பணம் தரணும்.

*"ஓடியிட்ட பிச்சையும் உவந்தளித்த தானமும்*
*தானமும், சாடிவிட்ட குதிரைபோல நேரில்*
*வந்து நிற்குமே" - என்பது பழம் பாடல்.*

"மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம்" எனவே எப்போதும் சிரித்த முகத்துடன் இருங்கள். எதையோ பறி கொடுத்தவர்கள் போல "உம்மணா மூஞ்சியுடன் இருக்காதீர்கள்" சிரித்துப் பேச காசுபணம் ஒன்றும் செலவாகாது.

"அவரவர் பெற்றது ஆண்டவன் இட்டது" எனவே பிறரைப் பார்த்து அவர்கள் மாதிரி இருக்க முடியலையே என பொறாமைப் படாதீர்கள். பொறாமை ஒரு பெரிய நோய். போட்டி பொறாமையாக, மாறி அதுவே கோபம் பாவம் சண்டாளம் என முடியும்.

நல்லதை நினை, நல்லதை செய். நல்லதே நடக்கும் என்ற படி வாழ்ந்தால், "இன்பமே எந்நாளும் என வாழலாம்" பிறவி எடுத்ததே பிறருக்கு உதவத்தான், துன்பத்தில் இருப்போர்க்கு முடிந்த வரை உதவுதல். அல்லது இதமான வாய் வார்த்தையாவது கூறுதல் மனித தர்மம். தர்மத்தை நாம் கடை பிடித்தால், அந்த தர்மம் நம்மைக் காக்கும் என்பதில் சந்தேகமே வேண்டாம்.




**இப்படி எல்லாம் செய்தால் நம் இல்லத்தில் ஒரு லக்ஷ்மி என்ன, அஷ்ட லட்சுமிகளும் நாம் அழைக்காமலேயே வந்து நித்ய வாசம் செய்வார்கள்.**

*****


# வேத பண்டிதர்களிடம் மஹாபெரியவாளுக்கு இருந்த அன்பும், காட்டிய மரியாதையும்

ஸ்ரீ பெரியவாளுக்கு, பீடாதிபதி ஆன 75-வது ஆண்டு "பவள விழா" வெகு விமர்சியாகக் கொண்டாட, பாரதத்தில் உள்ள முக்கிய அரசியல் பிரமுகர்களும், பல்வேறு துறைகளை சார்ந்த பிரமுகர்கள், அறிஞர்கள், ஸ்ரீ மடத்து முக்கியஸ்தர்கள் இப்படி பல்வேறு பிரிவினர் பெரியவாளை அணுகி தங்கள் விருப்பத்தை வெளியிட்டனர். அதற்க்கு அவர் நானோ சந்நியாசி. இப்போ மடத்துப் பொறுப்புகளிலும் இல்லை. பின் எதற்கு இந்த விழாக்கள்? என மறுத்தார்கள். தொடர்ந்து வற்புறுத்தவே, பக்தர்களின் குறை தீர்க்கும் அந்தப் பரப்பிரம்மம். "சரி அப்படியானால் நாட்டில் உள்ள வேத விற்பன்னர்களை அழைத்து பெரிய அளவில் ஒரு வேத சதஸ் நடத்தணும். யாருக்கும் எவ்விதக் குறைவும் இல்லாமல், சாப்பாடு, சம்பாவனை அது தவிர ஒவ்வொருவருக்கும் தலா ஒரு பவுன் தங்க நாணயம் வழங்க வேண்டும். இதற்க்கு சம்மதமானால் செய்யுங்கள் என உத்தரவு ஆயிற்று. இந்த விழாவுக்காக ஒரு கமிட்டி உருவானது. அதற்குத் தலைவர், "புதுப் பெரியவா என அழைக்கப்படும் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். மஹாலக்ஷ்மியின் அம்சம். கேட்கணுமா? மளமள என வேலைகள் நடந்தன. அவர் வேண்டுகோளை ஏற்று நாட்டின் மூலை முடுக்கில் இருந்தெல்லாம் பணமழை கொட்டியது. காஞ்சியில் உயர்தர வேதவிற்பனர்கள் 75 பேர் வரவழைக்கப் பட்டனர். மாபெரும் சதஸ் பண்டிதர்களுக்கு மட்டுமல்ல அவர்களின் குடும்பத்திற்கே வஸ்திரங்களை வழங்கி மகிழ்ந்தார் புதுப் பெரியவா, அது மட்டுமல்ல நாட்டில் உள்ள வேதபாடசாலை குழந்தைகளும் வருவிக்கப் பட்டு அனைவருக்கும் வஸ்திரம். அறுசுவை உணவு. தம் வாழ்நாளில் இதுபோல் ஒரு விருந்தினை கண்டதில்லை என அனைவரும் பாராட்டினார். இந்த 75-வேத வித்துக்களையும் அழைத்துக் கொண்டு மஹாபெரியவா சன்னதிக்கு சென்றார் புது பெரியவா. அப்போது நம் மஹாபெரியவா ஷோலாப்பூர் அருகே உள்ள துலஜாப்பூரில் இருந்தார். அவர் கையாலேயே தங்க காசும், சம்பாவனையும் செய்யப்பட்டது (இது இப்படியே இருக்கட்டும்).

அங்கே, கைலாயத்தில் பார்வதி தேவியை பாணிக்கரஹணம் செய்துகொள்ளும் சமயம். அந்த மகேஸ்வரன் மனதில் என்ன தோன்றியதோ? "சப்த ரிஷிகளையும் மனத்தால் சமரித்தார் ஈஸ்வரன். அடுத்தகணமே, சப்தரிஷிகளும் அங்கே பிரசன்னமாகி அம்மை அப்பனை வணங்கி நின்றனர்.முகமன் கூறி ஈசன் வரவேற்றார். ரிஷிகள் வினவினார். சுவாமி இந்த புனிதமான வேளையில், தாங்கள் எங்களை நினைக்க நாங்கள் என்ன பாக்யம் செய்தோமோ? என மகிழ்கிறோம் என கூற; மற்றைய தேவர்களும், மூவரும், முப்பத்து முக்கோடி தேவர்களும் அதனை ஆமோதித்தனர். ஈசன் சொன்னார். வேதம் என் மூச்சுக்காற்று. அதனை ஓதி உணர்ந்த தாங்கள் எப்போதும் என் இதயத்தில் நித்ய வாசம் செய்பவர்கள். உங்களை நினைக்காமல் வேறு யாரை நினைக்கப் போகிறேன் என்றார்.

இதனை மகாகவி காளிதாசர் தனது குமார சம்பவம் என்னும் காவியத்தில் 6-18 ல் குறிப்பிட்டு உள்ளார். இனி இங்கே வருவோம். பவளவிழா வைபவத்தில் வயோதிகத்தின் காரணமாய் கலந்து கொள்ள இயலாத வேத விற்பன்னர்களுக்கு அவர்களின் வீடு தேடித் போய் சம்பாவனை

செய்துவிட்டு வரவேண்டும் என்பது மஹாபெரியவா உத்தரவு. அப்படி தன் இல்லம் தேடிவந்து கொடுத்த சம்பாவனைகளுக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதிய ஒரு பெரியவர் தன் கடிதத்தில் இப்படி குறிப்பிடுகிறார்.



படம்: வேத பண்டிதர்களுடன் மகா பெரியவா, சம்ஸ்க்ருத கல்லூரி, மதராஸ். இந்த படம் “Divya Dharshan of Sri Kanchi Mahaswami – Vol 1”-இல் இருந்து விளக்க நோக்கத்திற்காக மட்டுமே சமர்ப்பிக்கப்படுகிறது.

காளிதாசன் சொன்னபடி அன்று மகேஸ்வரன் சப்த ரிஷிகளை மனதில் நினைத்து பெருமை படுத்தினான். இன்று இந்த மகேஸ்வரன் என்னையும் ஒரு பொருட்டாகக் கருதி பெருமை படுத்தினார். பெரியவா மனசில் என்னை நினைக்கும் அளவிற்கு எனக்கு என்ன யோக்கிதை இருக்கு? கருணை கடலின் காருண்யம் என கண்ணீரோடு கடிதம் எழுதினர்.

வேதம் என வந்து விட்டால் மஹாபெரியவாளுக்கு, வேதம் முற்றும் கற்றோதிய பண்டிதர்களும் சரி. வேத பாடசாலையில் படிக்கும் குழந்தைகளும் சரி எல்லோரும் ஒன்றுதான்; சம த்ருஷ்டிதான், அதற்கு உதாரணமாய் காஞ்சியில் நடந்த ஒரு உண்மை சம்பவம், அதை அடுத்த இதழில் பார்ப்போம்.

*****

# மரங்களின் மகத்துவம்

- திரு. வேணுகோபால் கிருஷ்ணமூர்த்தி



மரங்களின் மகத்துவம், ஸ்ரீ பெரியவா என்னை யாரிடம் அனுப்பி வைத்தார்? தொடர்ச்சி...

குறிப்பிட்ட நாளில் ஸ்ரீமடம் சென்றேன். பெரியவாளின் உதவியாளர் என்னை அழைத்து சென்று ஒரு முதியவரிடம் கொண்டு சேர்த்தார். முதல் பார்வையிலேயே அவர் யாராக இருக்கும் என்பதை அவரின் தோற்றத்தில் இருந்து யூகித்தேன், பெரிய வேத விற்பன்னராய் இருக்க வேண்டும். நமஸ்கரித்து எழுந்தேன் எனது இரு கரங்களையும் பற்றிக்கொண்டு, "நீ எவ்வளவு பெரிய கார்யங்களை செய்து கொண்டு இருக்காய் தெரியுமா?" என்றார். பெரியவாளின் உதவியாளர் அவர் யார் என்பதை எனது காதில் மெதுவாக சொன்னார். ஆனந்தம், ஆச்சர்யம், அதிர்ச்சி அவர் ஸ்ரீ பால பெரியவாளின் பூர்வாஸ்ரம தந்தை. "**பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்**"



மீண்டும் நமஸ்கரித்து எழுந்தேன். "எப்பேர்ப்பட்ட மனிதர், நமக்காக தான் பெற்ற குழந்தையை இந்த லோகத்தின் ஷேமத்திற்காக வீட்டுக் கொடுத்த மாபெரும் தியாகி. பெற்றோருக்கு எத்தனை குழந்தைகள்தான் இருக்கட்டுமே, அத்தனை பேரையும் ஆளாக்கி, உத்யோகத்தில் அமர்த்தி, திருமணம் நடத்தி வைத்து பேரன் பேத்திகளை பார்க்கத்தானே விரும்புவார்கள்? ஆனால் தனது ஆசைகளை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு செய்த மாபெரும் தியாகம்! காரணம்

குருநாதர்களின் கட்டளை. ஆம்! ஸ்ரீ புதுபெரியவாளும், ஸ்ரீ மஹாபெரியவாளும் இட்ட கட்டளை. அதை அவர் நிறைவேற்றினார்.

அதன் பயனாய் அந்த கால கட்டத்தில் நம் ஸ்ரீ மடத்திற்கு மும்மூர்த்திகள் கிடைத்தார்கள். ஒரே இடத்தில் மூன்று பேர்களை தரிசிக்கும் பாக்யம் நமக்கு கிடைத்தது. சரி விஷயத்துக்கு வருகிறேன்.



படங்கள் (இடமிருந்து வலம்): நட்சத்திர வனம், வேடல்; தேனம்பாக்கம்; வில்வ மரம், அருள்மிகு காமாட்சி அம்மன் ஆலயம்

அவர் சொன்னார், நாங்கள் ஆயுள் முழுக்க வேதம் சொல்வதின் பயனை நீ ஒரே ஒரு வில்வ மரத்தை நட்டு வைப்பதால் பெற்றுவிட்டாய். எத்தனை மரங்கள் நட்டு இருப்பாய், யாருக்கு கிடைக்கும் இந்த பாக்யம் எல்லாம்? தொடர்ந்து செய். இருபத்தியேழு நக்ஷத்திரத்திற்கும் விருக்ஷங்கள் இருக்கு, எழுதி தரேன்; ருத்திராக்ஷ மரம் இருக்கு, அங்கோலா என்ற ஏறழிஞ்சில் மரம் இருக்கு, எல்லாம் தெய்வீக விருக்ஷங்கள். அந்த மரங்கள் இருக்கும் கோவில்கள், ஊர்களை சொன்னார். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பேசினார். அடிக்கடி வா, நான் அந்தப்பக்கம் வரும்போது சொல்லி அனுப்புகிறேன். வந்து பார் என்றார். ஆக என்னை தொடர்ந்து விருக்ஷங்களை வைப்பதற்கு ஊக்கம் கொடுத்து. ஆசி கூறி அனுப்பி வைத்தார். அவருடைய கருணை, ஆசிகள். நான் இப்போது வரை இந்த பணியினை தொடர்ந்து செய்து வருகிறேன். அந்த மஹானை நினைக்காத நாள் இல்லை. இது எனக்கு ஸ்ரீ பாலப் பெரியவா அவர்களின் கருணையால் கிடைத்தது. அவர் சொன்ன அத்தனை விஷயங்களும். சமீபத்தில் கிடைத்த, "மரங்களும் நமது பிள்ளைகளே" என்ற புஸ்தகத்தில் இருக்கிறது. வ்ருக்ஷ சாஸ்த்திரம், வ்ருக்ஷ ஆயுர்வேதம் ஆகிய நூல்களில் உள்ளன இதனை எழுதியவர், பிரம்மஸ்ரீ சுந்தர ராம வாஜ்பேயீ அவர்கள். இப்புஸ்தகத்தையும் எனக்கு ஸ்ரீ பால பெரியவர் அவர்களே கொடுத்து அனுகிரகித்தார்.

*****

# பலன்தரும் பதிகங்கள்

- ஸ்ரீ கலாவதி, ஊட்டி

உலகம் என்பது பகலும், இரவும் கலந்தது. அதுபோல வாழ்க்கை என்பது, இன்பமும், துன்பமும் கலந்ததே. இருளைப் போக்க நாம் தீபங்களின் ஒளியை ஏற்றுகின்றோம். அதே போன்று துன்பங்களைப் போக்குவதற்கு இறைவனின் அருள் என்னும் ஒளியைப் பெற வேண்டும். அதற்கு தமிழ் வேதத் திரட்டில் எண்ணற்ற பாடல்கள் உண்டு. நாம் அவற்றை நம்பிக்கையுடன் மனம் ஒன்றி, பாராயணம் செய்து வந்தால், நமது துன்பங்கள், சூரியனைக் கண்ட பனிப்போல விலகிவிடும் என்பதை அவரவர் அனுபவத்தால் உணரலாம். நாம் வாய்விட்டு பாராயணம் செய்வதால், வெளிவரும் ஒலி அலைகள் நமக்கு பலத்தையும், பாதுகாப்பையும் அளிக்கும். எல்லோரும் அறிந்த இந்த விவரங்களை அறியாதவர்களுக்காக அவர்கள் அறிந்து வாழ்வில் வளம் பெறுவதற்காகவே இந்த “பலன் தரும் பதிகங்கள்” என்னும் தொடரை இறைவனின் பாதக் கமலங்களை வேண்டி ஆரம்பிக்கின்றேன்.



**பதிகம் – 1 (பொருள் தரும் பதிகம்)**

*“பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை”*

*“திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு” - என்பவை ஆன்றோர் வாக்கு.*

எனவே, நாம் வாழ்வதற்குத் தேவையான பொருளைப் பெறுவதற்காக, இறைவனின் கருணையை வேண்ட வேண்டும் பொருள் பெறுவதற்கான பதிகத்தைப் பற்றி இத்தொடரில் எழுதுகின்றேன்.

**பதிக வரலாறு:** திருஞானசம்பந்தப் பெருமானின் தந்தையார் திருவாவடுதுறையில் யாகம் செய்வதற்காகப் பொருள் வேண்டினார். அப்போது சம்பந்தர் ஆவடுதுறை உறையும் எந்தையின் அடித்தலங்களை வேண்டி இப்பதிகத்தைப் பாடினார். பெருமானும் ஆயிரம் பொற்காசுகளைப் பலிபீடத்தில் வைத்து அருளினார்.

**திருவாவடுதுறை** **பண்: காந்தார பஞ்சமம்**

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (1)

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும்உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (2)

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங் கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (3)

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (4)

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (5)

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்த வெண் பொடியணி சங்கரனெ

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (6)

வெப்போடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அல் எழ விழித்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (7)

பேரிடர் பெருகி ஓர் பிணிவரினும்
சீருடைக் கழவ அலால் சிந்தை செய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (8)

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடியலால் உரையாது என்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (9)

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தா உன் அடி அலால் அரற்றாது என்நாப்
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல் அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே. (10)

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை யெம் இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்

வினையாயின நீங்கிப் போய் விண்ணவர் வியனுலகம் நிலையாக முன் ஏறுவர் நிலமிசை
நிலையிலரே. (11)

**(பதிகம் முற்றிற்று)**
**திருச்சிற்றம்பலம்**

**வாழ்க்கை அனுபவம்:**

இப்பதிகத்தை நம்பிக்கையுடன் பாராயணம் செய்தால் கண்டிப்பாக எந்த வழியிலாவது நமக்கு தேவையான நேரத்தில் பொருள் இறைவனின் அருளால் கிடைக்கும். இதற்கு பல சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்றை எழுதுகின்றேன்.

ஓர் ஒய்வு பெற்ற அரசு அலுவலர் தமது மகளின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார். தனக்கு வர வேண்டிய தொகையை எண்ணி எல்லா எற்பாடுகளையும் செய்தார். ஆனால் தொகை வரவில்லை. திருமண நாள் நெருங்குகிறது. திருமணத்தை நிறுத்தி விடலாமா என்று கூட சிந்தித்தார். தினமும் காலையும், மாலையும் எம்பெருமானை வேண்டி இப்பதிகத்தை பாராயணம் செய்தார். ஒருநாள் தேநீர் கடை ஒன்றில் தனது பால்ய நண்பரைச் சந்தித்தார். நண்பர் வெளிநாட்டில் இருந்தவர். நண்பர்கள் பல விஷயங்களைப் பேசினர். அப்போது தனது மகளின் திருமணத்தைப் பற்றியும், பணம் வந்து சேராததைப் பற்றியும் கூறினார். உடனே நண்பர் திருமணச் செலவிற்கு தேவையான பணத்தையும், மணமகளுக்கு அருமையான பரிசையும் கொடுத்தார். திருமணம் நன்கு நடந்து முடிந்தது. பிறகு அவருக்கு பணம் வந்து சேர்ந்தது. அவர் நண்பருக்கு பணத்தைத் திருப்பி அளித்தார். இறைவனின் கருணையால் உரிய நேரத்தில் பொருள் கிடைத்தது. எனவே, அனைவரும் பலன் தரும் பதிகங்களைப் படித்து வாழ்வில் முன்னேற இறைவனை வேண்டுகிறேன். மற்றொரு பதிகத்துடன் மீண்டும் சந்திப்போம்.

அனைவருக்கும் நன்றி,
திருச்சிற்றம்பலம்

*****

# குறையால் நிறையாது மனது

- திரு. மனோகர், குவைத்

குருகுலம் ஒன்றில் குருவின் முன்னால் சீடர்கள் அனைவரும் அமைதியாக அமர்ந்து இருந்தார்கள். அன்று அவர்கள் அனைவருக்கும் குருகுலத்தின் கடைசிநாள், குருவிடமிருந்து எல்லா வித்தைகளையும் கற்று நாளை வெளியே போகபோகிறோம் என்று எண்ணி அனைவரும் காத்திருந்த வேளையில் திடீரென்று குருவானவர் "உங்களுக்கு நான் இப்பொழுது பரீட்சை ஒன்றை வைக்கபோகிறேன்." என்று கூறினார். இதைக்கேட்ட அனைவரும் போகின்ற வேளையில் இது என்ன புது பரீச்சை? என்று யோசித்தனர். அப்பொழுது அந்த குரு "இந்த பரீட்சையில் நீங்கள் தேர்ச்சி பெறுவதைப் பொறுத்து உங்களுடைய எதிர்காலம் பெரும்பாலும் அமையும் என்பதை மனதிற்கொண்டு எனது கேள்விக்கு விடையளியுங்கள்" என்றார்.

சீடர்கள் அனைவரும் திகைப்பில் அழ்ந்திருந்த வேளையில் குரு அவர்களுக்கு முன் ஒரு வெள்ளை நிற விரிப்பை விரித்தார் அதன் நடுவே ஒரு கரிய மை கொண்டு ஏதோ தீட்டினார். வெள்ளை நிற விரிப்பின் நடுவே ஒரு கறுப்பு பொட்டு வைத்தது போல அது இருந்தது. குரு சீடர்களை பார்த்து இப்பொழுது இங்கு காணும் பொருளைப் பற்றி உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை என்னிடத்தில் எழுதி கொடுங்கள் என்றார்.

சீடர்கள் ஒவ்வொருவரும் சுவடிகளை எடுத்து அவரவர்களுக்குத் தோன்றியதை எழுதி குருவிடம் கொடுத்தார்கள். குரு ஒவ்வொருவருடைய சுவடிகளையும் எடுத்து வாசிக்க ஆரம்பித்தார், எழுதியவர்கள் அத்தனை பேரும் வெள்ளை விரிப்பிலிருந்த கரும்புள்ளியைப் பற்றியே கருத்துக்களை தெரிவித்து இருந்தனர். எல்லா சுவடிகளையும் படித்து முடித்த குரு சுவடிகளை எல்லாம் ஒரு ஒரத்தில் வைத்தார் பின்னர் தன் சீடர்களை நோக்கி "இந்த பொருளைப் பற்றி என்னுடைய கருத்து என்ன என்பதை நீங்கள் அறிய விரும்புகிறீர்களா?" என்;று கேட்டார். அனைவரும் ஆர்வத்ததுடன் "ஆமாம்" என்றனர். குரு புன்னகைத்தவாறே வெள்ளை விரிப்பு பெரிதும் வெள்ளையாக இருக்கிறது" என்றார் மாணவர்கள் அனைவரும் வாயடைத்து நின்றனர். குரு அப்பொழுது சீடர்களே இவ்வளவு மிகப்பெரிய வெள்ளை விரிப்பில் உள்ள கரும்புள்ளியை மட்டுமே நீங்கள் கூர்ந்து கவனித்து இருக்கிறீர்கள் உங்கள் கவனம் அதில் இருந்ததால் அதை விட பன்மடங்கு நிறைந்துள்ள வெண்மை உங்கள் கண்களை மறைத்துவிட்டது.

இப்படித்தான் இந்த உலகத்தில் மற்றவர்களுடைய குற்றங்களையும், குறைகளையும் மட்டுமே நாம் உற்று நோக்கினால் அவர்களிடம் உள்ள நல்ல பண்புகள் நம் கண்களுக்குத் தெரியாது. எனவே குற்றத்தைத் திருத்தி நல்வழிப்படுத்த நம் மனதின் உள்ளே நன்மையைப் பற்றிய எண்ணங்களே கூடுதலாக இருக்க வேண்டும். நன்மையைப் பற்றிய எண்ணம் நம்மிடம் இருந்தால் குற்றங்களே மறைந்து விடும் ஆகவே நாளை நீங்கள் வெளியே சென்றதும் அடுத்தவரிடம் இருக்கும் குறைகளையே எண்ணிக் கொண்டிருக்காமல் அவர்களிடம் உள்ள நிறைகளை எண்ணிப் பாருங்கள். அதுவே உங்கள் மனதிற்கு அவர்களையும் பிடித்தவர்கள்

ஆக்கும்" என்று கூறினார் சீடர்கள் அனைவரும் குருவின் உபதேசத்தைக் கேட்டு வாயடைத்து நின்றனர்.

அன்பர்களே! நாமும் நம்முடைய சுற்றத்திடமும் நட்பிடமும் அவர்களின் குறைகளை எண்ணியே விலகி செல்கிறோம். விலகி செல்வதால் அன்பு குறையுமே ஒழிய கூடாது. அன்பு அதிகரிக்கக் குறைகளை நீக்கி நிறைகளை மனதில் கொள்ளுங்கள் அன்பும் அமைதியும் வளரும் இதைத் தான் வள்ளுவரும்,

"குணம் நாடி குற்றம் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்கக் கொளல்"

என்று கூறினார். எப்பெருமான் சிவபிரானும் இராஜராஜ சோழனுக்கு திருமுறைகளைக் கொடுத்த போது அவற்றின் பெரும் பகுதி செல்லரித்து இருந்ததைக் கண்டு இராஜராஜன் வருந்துகையில் "கொள்வனக் கொண்டு தள்வன தள்ளி ஆட்கொண்டோம்" என்று அருளினார். அதைத்தான் நம் முன்னோர்கள் "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" என்றனர். ஆகவே நாமும் குறைகளை விடுத்து நிறைகளை மட்டும் மனதில் கொள்வோம். உலகில் சாந்தி நிலவட்டும்.

*****

# வைணவப் பெரியோர்கள் வரலாறு

ஸ்ரீ வைஷ்ணவ பெரியோர்கள், அருளாளர்கள் வரிசையில் இப்போது நாம் பார்க்க இருப்பது ஓர் மாபெரும் அருளாளர். ஆம் வரதராஜ பெருமாளுக்கு விசிறி கொண்டு வீசி. அவருடன் பேசிக்கொண்டு இருக்கின்ற பெரும் பாக்கியம் பெற்றவர், அவர்தான், **திருக்கச்சி நம்பிகள்.**



சென்னையை அடுத்து இருக்கும் பூவிருந்த வல்லி என்ற பூந்த மல்லியில் அவதாரம் செய்தவர். வீரராகவன், கமலாயர் தம்பதிகளுக்கு நான்காவது மகனாய் அவதரித்தார். வணிகர் குடியில் பிறந்த இவருக்கு தனது சகோதரர்கள் போல் வாணிபத்தில் நாட்டம் இல்லாமல். பெருமாளின் தாசனாகவே தன் வாழ்நாள் முழுதும் அர்ப்பணிக்க விரும்பினார். தனக்கு கிடைத்த தன் சொத்தின் பெரும்பகுதியை சகோதரர்களுக்கே கொடுத்து விட்டு, ஒரு சிறு பங்கு நிலத்தில் நந்தவனம் அமைத்து, அதில் வண்ணமிகு, வாசமிகு மலர் செடிகளை பயிரிட்டு, அந்த மலர்களைக் கொய்து மாலைகளாக கட்டி, பூவிருந்த வல்லி-யில் இருந்து, காஞ்சிபுரம் வந்து, தேவராஜ பெருமாளுக்கு சூட்டி மகிழ்ந்தார். அது மட்டுமல்ல, பெருமாளுக்கு விசிறி கொண்டு வீசுவார், ஆம்; யாக குண்ட அக்னியில் இருந்து ஆவிர்பவித்தவன் அல்லவா? அவன் திருமேனி எப்பவும் வியர்த்து கொண்டு இருக்குமாம், விசிறுவது மட்டுமல்ல, பெருமாளோடு பேசிக்கொண்டும் இருப்பாராம்.

என்ன ஒரு பாக்கியம்!

அடியார்கள் தங்களை பற்றி கேட்கும் வினாக்களுக்கு, பெருமாளிடம் கேட்டு பதிலை வாங்கி, அந்த அடியவர்களுக்கும் சொல்வாராம். இப்படி இருக்க ஒரு நாள் (*தொடரும்*)...

*****

# கண்ணன் கதைகள்

*நம்பிக்கையான பக்திக்கு இரங்கிய பரமன்*



குருவும், வாயுவும் சேர்ந்து உண்டாக்கிய ஸ்தலம் குருவாயூர். இங்கே கண்ணன் தினமும் தன் அருளாட்சி நடத்திக்கொண்டு இருக்கிறான், காலம் காலமாக, அதில் ஒன்றுதான் இது. குருவாயூரில் எல்லோருமே கிருஷ்ணா பக்தர்கள் என்றாலும் அதில் குறிப்பிட தக்கவர்கள் இருவர். பில்வ மங்களன் என்ற ஒரு முதியவர், குரூரம்மை என்ற மூதாட்டி. இவர்களின் பக்தி எப்பேர்பட்டது என்றால், கிருஷ்ணன் இவர்கள் இல்லத்திற்கு வந்து உண்டு, உறங்கி விளையாடுவானாம். பிறர் இதனைக் காண முடியாவிட்டாலும் அவன் ஓடியாடி விளையாடுகையில் ஏற்படும் கொலுசின் ஒலி எல்லோர் காதுகளிலும் கேட்குமாம். இதில் பில்வ மங்களன் பக்தி ஒரு தந்தையைப் போன்ற கண்டிப்புடன் கூடியது. கிருஷ்ணா விளையாடியது போதும் வா சாப்பிடு தூங்கு என்று அதட்டலுடன் இருக்கும். குரூரம்மயோ, கிருஷ்ணா என் செல்லமல்லவா. ஓடியாடி கால் வலிக்குமே கண்ணே! வா சமத்தா இந்த பாலைக் குடித்துவிட்டு தூங்கு. போனபிறவியில் ராமனாய் பிறந்து 14 வருடம் காட்டில் நடந்தாயே. அசுரர்களோடு சண்டை போட்டு களைத்து போனாயே! வந்து படுத்துக்கோ! கால் பிடித்து விடுகிறேன் என பாசத்தோடும் வாஞ்சயோடும் நடந்து கொள்வாள்.

அந்த ஊரில் ராசுக் குட்டன் என்ற பெரிய தனவான் இருந்தார். அவருக்கு தீராத வயிற்று வலி. சூலை நோய். பார்க்காத வைத்தியம் இல்லை. இருப்பினும் நோய் குணமாகவில்லை. பகவான் ஸ்ரீ க்ரிஷ்ணரோடு உறவாடும் இந்த இருவரிடமும் சென்று முறையிடுவோம். அவர்கள் சிபாரிசின் பேரில் கிருஷ்ணன் குணமாக்க மாட்டானா என முதலில் பில்வ மங்களரை நாடினான். "கிருஷ்ணரிடம் சொல்லி என் நோயை குணப்படுத்துங்கள் என வேண்டினான். அவரும் சரி! இன்று மாலை கிருஷ்ணர் வரும்போது சொல்கிறேன் என்றார். கிருஷ்ணரும் வந்தார். "கிருஷ்ணா இந்த ராசுக்குட்டனின் வயிற்று வலியை குணப்படுத்தேன், உன்னால் முடியாதா, நீ நினைத்தால் செய்யலாம் என்றார். கிருஷ்ணன், "அது அவன் பூர்வ ஜென்ம வினை அனுபவித்துத்தான் தீரணம் என்றார். சரி! அவனிடம் சொல்லி விடுகிறேன் என்றார். ராசு

குட்டனும் கிருஷ்ணன் என்ன சொன்னார் என கேட்டபோது. "உன் பூர்வ ஜென்ம வினை"- என சொல்ல, மனம் உடைந்த குட்டன். குரூரம்மையை அணுகி நடந்ததை சொன்னான். அவளும் மனம் இறங்கினாள்; தாயுள்ளம் அல்லவா? மாலை அவள் வீட்டுக்கு கிருஷ்ணன் வந்தபோது. "வா கிருஷ்ணா உனக்காக அப்பம், சீடை செய்து வைத்து இருக்கிறேன், சாப்பிடு என்றாள். சாப்பிடும்போது குட்டனைப் பற்றிக் கூறி, "கிருஷ்ணா அவன் பாவம். துன்பப படுகிறான். உன்னிடம் கூறிவிட்டேன். நீ கட்டாயம் அவன் குறை தீர்ப்பாய். இந்த பாலை குடித்துவிட்டு என் மடியில் படுத்து தூங்கு. இந்த பாலைக் குடித்து முடிக்கும் தருணம் அவன் வயிற்று வலியும் குணமாகும். கிருஷ்ணன் பாலை குடித்தான். கடைவாயின் ஓரம் வழிந்த பாலை, அம்மை துடைத்து விட்டு, கிருஷ்ணனை தன் மடியில் கிடத்தி தட்டிக் கொடுத்தாள். கண் மூடும் முன், கண்ணன் லேசாக சிரித்து விட்டு, கண்களை மூடினான். அவன் சிரித்த அக்கணமே, குட்டனின் வயிற்றுவலி மாயமாய் மறைந்தது. படுக்கையில் இருந்து துள்ளிக் குதித்து எழுந்த குட்டன், ஆடினான், ஓடினான், பாடினான், கண்ணனின் கருணையை எண்ணி கண்ணீர் மல்கினான். அம்மையின் இல்லம் நோக்கி அனைவரும் ஓடினர். அம்மையை தொழுது நன்றி கூறினான், "அம்மையே என் தீராத நோய் இன்று தங்களால் தீர்ந்தது. நான் என்ன செய்யணும்? உங்களுக்கு என்ன வேண்டும்? என வினவ, ஆவளோ: "எனக்கு ஒன்று வேண்டாம், நன்றியை கிருஷ்ணனுக்கு சொல்லுங்கள். அவன்தான் ஜகத் ரக்ஷகன் அவன் நினைத்தால் முன் வினை என்ன செய்யும்? ஓடிவிடாதா? எல்லோரும் கிருஷ்ண பக்தியுடன் இருங்கள் அது போதும் என்றாள்!" விஷயத்தைக் கேள்விப்பட்ட பில்வ மங்களனுக்கு கொஞ்சம் வருத்தமும், கோபம் கூட ஏற்பட்டது, "வரட்டும் அந்த கிருஷ்ணன், என்பக்தியில் என்ன குறை கண்டாய் என கேட்கிறேன். கிருஷ்ணனும் வந்தான், பில்வமங்களன் பொரிந்து தள்ளினான், கிருஷ்ணரோ புன்னகைத்துக் கொண்டே "மங்களா உன் பக்திக்கு ஒன்றும் குறைவில்லை, ஆனால் கொஞ்சம் சந்தேகத்தின் சாயல் இருந்தது". "நீக்க மாட்டாயா? போக்க மாட்டாயா? என சந்தேகத்தோடு வினவினாய், ஆனால் குரூரம்மையோ "இந்த பாலைக் குடித்து முடிக்கும்போது அவன் நோய் தீர்ந்து போகும் என நம்பிக்கையுடன் சொன்னாள்" பூரண நம்பிக்கையோடு கலந்த பக்தியே எனக்கு பிடிக்கும், எந்த பூர்வ ஜென்ம வினை, கர்மாக்கள் இருந்தால் என்ன? முன்னவன் முன்னிருந்தால் முடியாதது ஒன்றில்லை என்பதை நீ அறியாயோ? என்னை சரண் அடைந்தால் பழ வினைகள் எல்லாம் தீயினில் தூசாகாதோ? என்று கூறி மறைந்தான். பில்வ மங்களனும் தன் தவறை உணர்ந்தான்.

பிள்ளைகளே இதில் இருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? நம்பிக்கை!! நம்பிக்கையோடு கூடிய பக்தி கட்டாயம் பலன் அளிக்கும். "இனி வரும் காலங்களில் நம் தேவைகளை, வேண்டுதல்களை, நம்பிக்கையுடன் கூடிய பக்தியோடு அவன் பாதைகளில் சமர்ப்பித்து வேண்டுவோம். கண்ணன் கட்டாயம் தருவான்.

*நன்றி: திரு திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் கூறியது*

ஸ்ரீ ஹரி ஸ்ரீ ஹரி ஸ்ரீ ஹரி நாராயண நாராயண நாராயண

*****

# சுந்தர காண்டத்தின் சிறப்பு























*படங்கள்: லிப்க்கோ ஸூந்தரகாண்டம் மூல புத்தகத்தின் வரைபடங்கள். இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.*

இராம காவியத்தின் நடுநாயகமாக விளங்குவது "சுந்தர காண்டம்" இராம கதையின் திருப்புமுனை என்று கூட சொல்லலாம். ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமிதான், இந்தக் காண்டத்தின் கதாநாயகன். தன் மனைவி சீதா தேவியை இப்பிறவியில் காண இயலுமோ என கலங்கி நின்றான் இராமன். இப்பிறவியில் தன் கணவன் ஸ்ரீராமரைக் காண இயலுமா என தவித்துக் கொண்டிருந்தாள் சீதை. அதுவும் பகைவன் ராவணன் நாட்டில். இருவரின் தவிப்பையும், கவலையையும் தீர்த்து வைத்தவர் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி. உயிரை மாய்த்துக் கொள்ள இருந்த சீதா தேவியை காப்பாற்றியது ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி சொன்ன "ராம நாமம்".

**சுந்தர காண்ட பாராயண பலன்கள்:** இதனை பாராயணம் செய்தால் தீர்க்க முடியாத எப்பேர்ப்பட்ட பிரச்சனையும் தீர்ந்து போகும். வேலை வாய்ப்பு, திருமணம், மகப்பேறு, கல்வியில் தேர்ச்சி, வழக்குகளில் வெற்றி, வியாபாரத்தில் அபிவிருத்தி. இப்படி சகல காரியங்களிலும் வெற்றி அடையலாம். சுருங்க கூறின் இது "சர்வ ரோக நிவாரணி" இதனை எந்த மொழியிலும் பாராயணம் செய்யலாம். சம்ஸ்க்ருத எழுத்துக்கள் தமிழிலேயே உள்ள புஸ்தகம் கிடைக்கிறது. கதை முழுக்க உரைநடையாகவும் கிடைக்கிறது. எப்படி படித்தாலும் பலன் உண்டு. தேவை நம்பிக்கையும், பக்தி மட்டுமே. ராம நாமா ஒலிக்கும் இடத்திலும், சுந்தரகாண்டம் பாராயணம் நடக்கும் இடத்திலும் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி நம் கண்களுக்கு தெரியாமல் நம் இல்லத்தில் அமர்ந்து, கண்களில் கண்ணீர் வழிய ராம ரசத்தை பருகுவார். சுந்தர காண்ட புஸ்தகத்திலேயே, பாராயண முறைகள் விளக்கப்பட்டு உள்ளது. மேலும் ஏதாவது சந்தேகம் இருப்பின் எங்களை அணுகவும்.

*****

# தெரிந்த புராணம்; தெரியாத கதைகள்

- செல்வி அ. பூஜிதா

மகாபாரதம் அனைவருக்கும் தெரிந்த புராணமே. அதுவும் தற்போது தொடர்ந்து வரும் ஊரடங்கு காலகட்டத்தில் இந்த மகா புராணத்தை சிறியவர் முதல் பெரியவர் வரை விரும்பி பார்த்தோ, படித்தோ, கேட்டோ மகிழ்ந்தனர். கடந்த இதழில் "மகாபாரத கொடிவழி" பற்றி தெரிந்து கொண்டோம். இனிவரும் நாட்களில், இப்புராணத்தில் இருந்து பெரும்பாலும் தெரியாத கதைகள் பற்றி பார்ப்போம். எனக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் என் அம்மா, அப்பாவுக்கு நன்றி.

## *மகனின் கரங்களால் மடிந்த அர்ஜுனன்*

குருஷேத்ர போருக்குப் பின் பாண்டவர்களும், கர்ணனின் மகன் விரிஷகேதுவும் அஸ்தினாபுரத்தை ஆண்டுவந்தனர். விரிஷகேதுவை அர்ஜுனன் தன் மகன் அபிமன்யுவை போல் பாசம் வைத்து வளர்த்து வந்தான்.



பாண்டவர்கள் அஸ்வமேத யாகம் நடத்தினர். யாக தீட்சைக்கான காலம் வந்தது, சித்ரா பௌர்ணமி அன்று தருமருக்கு முறைப்படி தீட்சை அளிக்கப்பட்டது. குதிரை, வியாசர் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது. அர்ஜுனனும், விரிஷகேதுவும் உடன் சென்றனர். எத்தடையும் இன்றி குதிரை சிந்து தேசம் வரை சென்றது. சிந்து தேசம் திருதராட்டிரனின் மகள்

துச்சலையுடைய கணவன் ஜயத்ரதன் ஆண்டுவந்தான். அங்கு சென்றதும், அந்நாட்டு மக்கள் அர்ஜுனன் மீது இருந்த கோபத்தால் அவனிடம் போரிட சென்றனர். அர்ஜுனனும், விரிஷகேதுவும் பாதி படையை வீழ்த்தனர். அப்பொழுது ஒரு தேர் வந்தது, அதில் ஒரு பெண் ஒரு குழந்தையை வைத்து கொண்டு நின்றுகொண்டிருந்தாள். அப்பெண் வேறு யாரும் இல்லை, அவள் தான் துச்சலை. அவள் அர்ஜுனனை பார்த்து, "ஏய் அர்ஜுனா, நீ என் கணவரை கொன்றாய். இப்பொழுது நீ வந்த செய்தி கேட்டு இந்த நாட்டின் அரசன், இந்த குழந்தை-யின் தந்தை, என் மகன், இறந்து விட்டான். இப்பொழுது இந்த நாடு அரசன் இல்லாத நாடாகி விட்டது. தயவு செய்து சென்று விடு", என்று கேட்டுக்கொண்டாள். தமக்கையின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அர்ஜுனன் சிந்து தேசத்தைவிட்டு சென்றான்.

பின்பு குதிரை மணிப்பூர் தேசத்திற்கு வருகிறது. அங்கு தான் அர்ஜுனனின் மற்றொரு மனைவி சித்ராங்கதையும் அவர்களின் மகன் பப்ருவாகனும் இருக்கிறார்கள். தனது தேசத்திற்கு போர் எடுத்து வந்திருப்பது தனது தந்தை தான் என தெரிந்தும் பப்ருவாகன் அர்ஜுனன்-முன் மண்டியிட்டு வணங்கினான்.உடனடியாக அர்ஜுனன் அவனை எழுப்பி அவனிடம், "நீ எதிர்த்து நின்று போரிடுவாய் என தானே நினைத்தேன். அது தானே சத்திரிய தருமமும்?" என கேட்டான். அப்பொழுது அர்ஜுனனின் மனைவி நாகக்கன்னிகை "உலூபி" அவ்விடத்திற்கு வந்தாள். தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.



அவள் பப்பருவாகனிடம், "நீ உனது தந்தையிடம் போரிடு, அதுவே அவருக்கு மகிழ்ச்சி தரும்." என்றாள். உடனடியாக அவன் போருக்கு தயார் ஆகிறான். இதைக் கண்டு அர்ஜுனன் மகிழ்ந்தான். கடும் போர் மூண்டது. இருவரும் மாறி மாறி அம்புகளை எய்தனர். பிப்ருவாகனன்

எய்த அம்புகள் அர்ஜுனனை அவன் மார்பில் தாக்கின. அர்ஜுனன் இறந்து கீழே விழுந்தான். பிப்ருவாகனன், விரிஷகேதுவையும் கொன்றான். தந்தை இறந்ததைக் கண்டு மயங்கி விழுந்தான். இச்செய்தி கேட்ட சித்ராங்கதை அங்கு வந்தாள். உலூபி இச்சம்பவங்களை பார்த்துக்கொண்திருந்தாள்.

அச்சமயம் கிருஷ்ணர் அங்கு வந்தார். அவர் உலூபியிடம் அர்ஜுனனை தனது வசம் இருந்தா சஞ்சீவன நாகமணியை கொண்டு உயிர்பிழைக்க செய்ய சொல்கிறார். உலூபியும் அந்த மணியைக் கொண்டு அர்ஜுனனை உயிர்பிழைக்க செய்கிறாள். அர்ஜுனன் உயிர் பிழைத்து எழுந்து நிற்கிறான். அப்பொழுது இறந்துக் கிடக்கும் விர்ஷகேதுவைப் பார்த்தபின் உலூபியிடம், "என் என்னை உயிர் பிழைக்க வைத்தாய்?, தமயன் அவருக்குப் பின் விர்ஷகேதுவைப் தான் அரசனாக்க எண்ணினேன்" என்றார். அதற்க்கு உலூபி கூறத் தொடங்கினாள்.

"நாகக் கன்னிகையாகிய நான் கங்கையில் இருந்த போது, வசுக்கள் எல்லோரும் நம்மில் ஒருவரான பீஷ்மரை, அர்ஜுனன் முறை தவறி கொன்று விட்டான்." உங்கள் மீது கோபம் கொண்டு சபித்து விட்டனர். இதை அறிந்த என் தந்தை, அவர்களிடம் சென்று வேண்டினார், அவர்கள் மனமிரங்கி, "அர்ஜுனனுக்கு மணிப்பூரில் மகன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் போர்புரியும் போது அர்ஜுனன் இறந்து விடுவான். அப்பொழுது நீ உன்னிடம் இருக்கும் நாகா மணியை கொண்டு அவனை உயிர்பிழைக்க செய்!" என்றார்கள். அதனால் தான் நான் இப்படி செய்தேன் என்று அவள் செயலுக்கு விளக்கமளித்தாள். மேலும் அவள் நீங்கள், "இல்லையெனில் கொடூரமான நரகத்தில் விழுந்திருப்பீர்கள்." என்று அர்ஜுனனிடம் கூறினாள்.

உடனடியாக கிருஷ்ணர், "அர்ஜுனா! காரணம் விளங்கியதா?" எனக் கேட்டார். உடனடியாக அர்ஜுனன், "கண்ணா! எப்பொழுதும் உன் துணையில்லாமல் தனியே நான் சென்றதில்லை. உன் துணையில்லாமல் நான் இங்கு வந்தது தவறு. இனிமேல் நீங்களே எங்களை வழி நடத்துங்கள்" என்று வணங்கினான்.

கண்ணபிரானின் கருணையை பற்றி எவ்வளவு கூறினாலும் தகும். அப்பேர் பட்ட அந்த உணராத தெய்வம் பாண்டவர்களுக்கும், அர்ஜுனனுக்கு செய்த ஆசிகள் போல் நாமும் எல்லா காரியத்திலும் அந்த கண்ணனின் அருள் வேண்டி பணிவோம்.

*****

# குழந்தை செல்வங்களின் கைவண்ணம்

## ராதா பாதி, கிருஷ்ணா பாதி

இராதா கிருஷ்ணன், ஆண்பால் மற்றும் பெண்பால் இணைந்த தத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. வைணவ மரபில் சுயம்பகவானாக விளங்கும் கிருஷ்ணரை பரமாத்மாவாகவும், ராதையை ஜீவாத்மாகவும் கருதப்படுகிறது.

ராதேஸம் ராதிகாப்ராண வல்லபம்
வல்லவீஸுதம்
ராதேஸேவித பாதாப்ஜம் ராதா
வக்ஷஸ்தலஸ்திதம்
ராதானுகம் ராதிகேஷ்டம் ராதாபஹ்ருத
மானஸம்
ராதாதாரம் பவாதாரம் ஸர்வாதாரம் நமாமிதம்




**படத்தை இயற்றியவர்:**
**செல்வன். தட்சிணாமூர்த்தி, கேரளா**

## அலங்கார விநாயகர்

எந்த ஒரு சுப காரியத்தை தொடங்குவதற்கு முன் விநாயகர் வழிபாடு செய்வது அவசியம். அதே போல எந்த ஒரு விஷயத்தை தொடங்குவதற்கு முன் 'சுக்லாம்பரதரம்' என்ற மந்திரத்தை உச்சரிப்பதால், நம் செயலுக்கு எல்லாமுமாக அந்த விநாயகரே உடன் இருப்பார் என்பது அதன் பொருளாகும்.

சுக்லாம் பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம்
ப்ரஸந்த வதநம் த்யாயேத் சர்வ விக்நோப
சாந்தயே
வக்ரதுண்ட மஹாகாய ஸூர்ய கோடி
ஸமப்ரபாம் நிர்விக்நம் குருமே தேவ
ஸர்வகார்யேஷு ஸர்வதா



**படத்தை இயற்றியவர்:**
**செல்வி. ம.அ. காவிய தர்ஷினி, திருச்சிராப்பள்ளி**

*****

# இம்மாதத்தில் வரும் பண்டிகை, விரத நாட்கள்

ஜனவரி 2022:

| | |
|---|---|
| 14 /01 /22 (தை 1) | மகர சங்கராந்தி பொங்கல் |
| 15 /01 /22 (தை 2) | மாட்டுப் பொங்கல் |
| 16 / 01 /22 (தை 3) | காணும் பொங்கல் |

*(இன்று 15/1 காலை 5:40 முதல் 6:30-க்குள் வீட்டின் முற்றத்தில் அல்லது மொட்டை மாடியில், மஞ்சள் இலை அல்லது வாழை இலை போட்டு, அதற்குமுன் அவ்விடத்தை சுத்தம் செய்து கோலம் செம்மண் இட்டு ..முதல்நாள் செய்த சாதத்தில் சிறிது மஞ்சள், குங்குமம் கலந்து, மஞ்சள் சாதம், சிகப்பு சாதம், வெள்ளை சாதம் என தனித்தனியாக உருட்டி வைத்து " காக்கை பிடி, கனுப்பிடி வைத்தேன்..காக்கைக்கு எல்லாம் கல்யாணம் என பெண்கள் கூறி காக்காயை அழைப்பர். இது பெண்கள் தன் பிறந்த வீடு நன்றாய் இருக்கணும் என்றும், தன் சகோதரர்கள் நலமாய் வாழ வேண்டும் என்றும் செய்வது. சகோதரர்கள் தன் சகோதரிகளுக்கு மஞ்சள் குங்குமம் புடவை போன்ற மங்கள பொருட்களைக் கொடுத்து வாழ்த்துவர்)*

| | |
|---|---|
| 18 /01 /22 (தை 5) | தைப்பூசம் குமரக்கடவுள் வழிபாடு |
| 28 /01 /22 (தை 15) | சர்வ ஏகாதசி |
| 31 /01 /22 (தை 18) | சர்வ அமாவாசை (முன்னோர்களை ஆராதிக்க வேண்டிய நாள்) |

*****



